# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 1041/16/ந

ஆணை எண்: 0028/2017

நாள்: 10/03/2017

திரு. A. லூர்துராஜா,
எண்.31, 12வது குறுக்கு தெரு,
புது காலனி,
சென்னை – 600 044. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி.

– எதிர் மனுதாரர்

**ஆணை:-**

முறையீட்டு மனுதாரரது 06.10.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.1041/2016-ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுவுடன் வரப்பெற்ற வழக்குரைஞரது கடிதங்களில் பல்லவபுரம் நகராட்சி உள்ளாட்சி தேர்தல் வாக்காளர் பட்டியல் முறைகேடுகள் குறித்தும் உதவித் தேர்தல் நடத்தும் அலுவலரது முரண்பட்ட செயல்பாடுகள் குறித்தும் புகார்கள் எழுப்பப்பட்டுள்ளன. இப்பொருட்கள் உள்ளாட்சித் தேர்தல் தொடர்புடையதாக இருப்பினும் 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2 (8)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள "சீர்கேடான

நிர்வாகம்" எனும் வரையறைக்குட்பட்டுள்ளது குறித்து பரிசீலித்திடும் பொருட்டு, முறையீட்டு மனு குறித்து பல்லவபுரம் நகராட்சி ஆணையரது பதிலறிக்கை கோரப்பட்டது.

மேலும், முறையீட்டு மனுதாரரது தரப்பிலான விளக்கங்களை சமர்ப்பிக்கும் பொருட்டு 07.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து முறையீட்டு மனுதாரருக்கு அழைப்பாணை (அசல் மனு எண்.1041/2016/ந) நாள்:03.11.2016 அனுப்பப்பட்டது. பல்லவபுரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.5790/2016/எப்2 நாள்:01.11.2016, இம்முறைமன்ற நடுவத்திற்கு 10.11.2016 அன்று வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது.

நகராட்சி ஆணையரது பதிலறிக்கையில், 13-வது பத்தியில், திரு. விமல்ராஜ் என்பவரது பெயர் மற்றும் பிற 39 வாக்காளர்களது பெயர்கள் 39-வது வார்டுக்கு பதிலாக தவறுதலாக 40- வது வார்டில் 19.10.2016 அன்று வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டதெனவும் பின்னர் அப்பதிவுகளை 40-வது வார்டில் நீக்கம் செய்து 39-வது வார்டில் சேர்க்கப்பட்டுள்ளதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து தனது பெயரினை 39-வது வார்டிலிருந்து நீக்கியுள்ளதால் தான் மிகவும் பாதிப்படைந்துள்ளதாக குறிப்பிட்டும், இவ்வாறான நீக்கம் குறித்து விசாரணை ஏதும் தன்னிடம் நடத்தப்படவில்லை எனவும், தனது பெயரினை 39-வது வார்டுக்கான வாக்காளர் பட்டியலில் சேர்த்திட வேண்டுமெனவும் வலியுறுத்தி திரு. விமல்ராஜ் என்பவர் பல்லவபுரம் நகராட்சி ஆணையருக்கு வழங்கியுள்ள 06.10.2016 நாளிட்ட புகார் மனுவின் நகலும் பரிசீலிக்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய அறிவுரைகள் ந.க.எண்.5017/2016/தே.பொ1 நாள்:13.09.2016ன்படி திருத்தப்பட்டியல் தயாரித்தல் பணியினை 26.09.2016க்குள் முடிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தேர்தல் விதிகளின்படி வேட்புமனு தாக்கலுக்கான கடைசி நாள் வரை சட்டமன்ற வாக்காளர் பட்டியலில் வெளியிடப்படும் திருத்தங்களின் அடிப்படையில் தொடர்புடைய உள்ளாட்சி வாக்காளர் பட்டியல்களில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வினத்தைப் பொறுத்தவரை சட்டமன்ற வாக்காளர் பட்டியலில் அதுபோன்ற திருத்தங்கள் ஏதுமில்லாத நிலையில் மாநிலத் தேர்தல் ஆணையம் நிர்ணயித்த காலக் கெடுவிற்குப்பின்னரும் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் முறையாக தொடர்புபடுத்தும் பட்டியலிட்டு அவ்வார்டுக்கான வாக்காளர் பட்டியல் மிக கவனத்துடன் தயாரிக்கப்படாததால் ஏற்பட்ட குளறுபடிகள் மற்றும் முரண்பாடுகளால் புகாருக்கு இடமளித்துள்ளதாகவே கருத வேண்டியுள்ளது. மேலும், வேட்பு மனு தாக்கலுக்கான கடைசி நாளான 03.10.2016க்குப் பின்னரே அத்தகைய முரண்பாடான திருத்தங்கள் மேற்கொள்ளப்-பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

07.12.2016 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்த விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. இருப்பினும், மேற்குறிப்பிட்ட காரணங்களின்படி இப்பொருள் குறித்து சம்பந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் உரிய ஆய்வு/விசாரணை மேற்கொண்டு விரிவான அறிக்கையினை மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் ஆகியோருக்கும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கும் சமர்ப்பிக்கலாமென இம்முறைமன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

2017–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10–ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

28/3/2017

செயலாளர்

பெறுநர்

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   செங்கல்பட்டு மண்டலம்.

2. மாவட்ட தேர்தல் அலுவலர் /
   மாவட்ட ஆட்சித் தலைவர்,
   காஞ்சிபுரம் மாவட்டம்.

3. மாநில தேர்தல் அலுவலர்/
   நகராட்சி நிர்வாக ஆணையர்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005.

4. நகராட்சி ஆணையர்,
   பல்லவபுரம் நகராட்சி.

5. A. லூர்துராஜா,
   எண்.31, 12வது குறுக்கு தெரு, புது காலனி, சென்னை – 600 044.